

கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களை தாம்பரம் மாநகர விளையாட்டு மேம்பட்டு அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.ஜி.கருணாகரன், துணை அமைப்பாளர்கள் இரா.தாமோதரன், பி. கார்த்திக் ராஜா, ஆர்.ரஞ்சித்குமார், வை.ரஞ்சித்குமார், வை.அருண்குமார், க.நாகேந்திரகுமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., 4,வது மண்டல குழுத்தலைவர் – பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் ஆகியோர் உள்ளனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, 158வது வார்டு, நந்தம்பாக்கம் பகுதியில் இருந்து பா.ஜ.க.வைச் சேர்ந்த எஸ்.நெல்லையப்பன், மாவட்ட ஓ.பி.சி. பிரிவுச் செயலாளர் பி.பிரகாஷ் ஆகியோர் தலைமையில் 10க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். அருகில் மாமன்ற உறுப்பினர் பாரதி வெங்கடேசன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் குமரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்த

# ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, ஆக.11-*

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 8 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில்,கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டபப்பட்டுள்ளன? என்றும், அனுமதிக்கப்பட்ட மருத்துப் பணியிடங்களில் எவ்வளவு பணியிடங்கள் காலியாக உள்ளது? என்றும், நிலைமையைப் சரி செய்யவும், கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்தவும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க சுகாதாரத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வரு மாறு:-

கடந்த மார்ச் 2023 நிலவரப்படி 25354 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமப்புறங்களிலும் 6528 நிலையங்கள் நகர்ப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன என்றும், பொது சுகாதாரத்திற்கு அந்தந்த மாநில அரசுகளே பொறுப்பு என்றும், கடந்த 202526 ஆண்டில் தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் கட்டமைப்புகளை மேம்படுத்த ரூபாய் நான்கு கோடியே 24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆயூஸ்மான் பாரத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் 18799 கோடிகளில் 621 உயிர் காக்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும்,15வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, கிராமப்புற சுகாதாரத்திற்கு ரூபாய் 70,051 கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கிராமப் புறத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கான சிறப்பு நிதியுதவி, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவர்களுக்கு சிறப்பு சலுகைகள், தாய்மார்களுக்குகென பணிபுரியும் செவிலியர்களுக்கான சிறப்பு ஊதியம், மருத்து மேற்படிப்பு படிக்க, கிராமப்புற மருத்துவர்களுக்கான முன்னுரிமை, மருத்துவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் என தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றியஅரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ், பதில் அளித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் வாழ்வாதாரம் காக்க வைகோவின் பயணம்!

*சென்னை, ஆக.11*

தமிழ்நாட்டின் எட்டு இடங்களில் நம் மாநில வாழ்வாதாரங்களைக் காக்க, ஜனநாயகத்தைப் பாதுகாக்க, மதச்சார்பின்மையை நிலைநிறுத்த மறுமலர்ச்சி திமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் பரப்புரைக் கூட்டங்கள் 2025, ஆகஸ்ட் 9 ஆம் நாள் தூத்துக்குடியில் தொடங்கியது. ஆகஸ்ட் 20 ஆம் நாள் சென்னையில் நிறைவடைகிறது.



இது குறித்து ம.தி.மு.க. தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2025 ஆகஸ்டு 11, இடம்: கம்பம், பொருள்: முல்லைப் பெரியாறும்; நியூட்ரினோவும்

2025 ஆகஸ்டு 12, இடம்: திண்டுக்கல், பொருள்: விவசாயிகள், மீனவர்கள் துயரம்

2025 ஆகஸ்டு 13, இடம்: கும்பகோணம், பொருள்: மேகதாதுவும், மீத்தேனும்

2025 ஆகஸ்டு 14, இடம்: நெய்வேலி, பொருள்: நெய்வேலி நிலக்கரி நிறுவனம்

2025 ஆகஸ்டு 18, இடம்: கோவை சூலூர், பொருள்: இந்தி ஏகாதிபத்தியம்

2025 ஆகஸ்டு 20, இடம்: திருவான்மியூர், பொருள்: சமூக நீதியும்; திராவிட இயக்கமும்

அனைத்துக் கூட்டங்களிலும் ம.தி.மு.க. பொருளாளர் மு.செந்திலதிபன், கவிஞர் மணிவேந்தன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் ‘மாணவர் மனசு’ பெட்டி திட்டம்!

## கேரள அரசுப் பள்ளிகளிலும் தொடக்கம்!

சென்னை, ஆக.11–

தமிழ்நாடு அரசு பள்ளிகளில் சிறப்பு திட்டமாக மாணவர்மனசு பெட்டி திட்டத்தை அறிவித்து அதனை வெகு சிறப்பாக செயல் படுத்திவருகிறார்கள்.அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர் மனசு பெட்டி வைக்கப்பட்டுள் ளது.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல் இத்திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து”ஆசிரியர்மனசு”திட் டமும் செயல்படுத் தப்பட்டு, ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்காக மின்னஞ்சலும் அறிவிக் கப் பட்டது. மாணவர்கள் தங்களின் விருப்பம், ஆலோசனை, கோரிக்கை ஆகியனவற்றை கடிதமாக எழுதி மாணவர் மனசு பெட்டியில் செலுத்தும் கடிதத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளி களுக்கு நேரில் ஆய்வுக்கு செல்லும் போது முதல் நிகழ்வாக மாணவர் மனசு பெட்டியில் உள்ள கடிதத்தை படித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் உத்தரவிட்டு துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மேலும் தலைமை ஆசிரியர் கள் மாணவர் மனசு பெட்டி கடி தங்கள் மீதும் உரிய தீர்வு கண்டு வருகிறார்கள் இந்த திட்டம் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது தமிழ்நாடு அரசு செயல்படுத் தும் மாணவர் மனசு பெட்டி திட்டத்தை தற்போது கேரளாஅரசும் “சுரக்சா மித்ரம்” என்ற திட்டம் என்ற பெயரில் செயல் படுத்தி வருகிறது.


